# RESEARCH PROJECT ABSTRACT 2023-24

**Name of the DIET (பணிபுரியும் நிறுவனம்) :**

மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
திருமூர்த்திநகர், திருப்பூர் மாவட்டம்.

**Name and designation of the researcher (ஆய்வாளர் பெயர் மற்றும் பதவி) :**

முனைவர். ம. சரவணகுமார், முதுநிலை விரிவுரையாளர்

**Title (ஆய்வுத் தலைப்பு) :**

உயர்தொடக்கநிலை மாணவர்களின் படித்துப் புரிந்து கொள்ளும் திறன் அடைவில் பயிற்சிப்புத்தகத்தின் தாக்கம்

## 1. Introduction (அறிமுகம்)

மொழிப்பாடம் திறன் வளர்க்கும் பாடம். மொழித்திறன்களை வளர்ப்பதே மொழிப்பாட நோக்கங்களுள் முதன்மையானது. படித்துப் புரிந்து கொள்ளும் திறன்சார்ந்த கற்றல் விளைவுகளை அடைவதில் மாணவர்களுக்கு உள்ள இடர்பாடுகளைக் கண்டறிந்து அதனைத் தீர்க்கவும் படித்துப் புரிந்துகொள்ளும் திறனை மேம்படுத்தவும் உறுதுணையாக அமையும் என்ற நோக்கில் இந்த ஆய்வானது மேற்கொள்ளப்பட்டது.

## 2. Need and significance(ஆய்வின் தேவையும் முக்கியத்துவமும்)

மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தைச் சார்ந்த கல்வியாளர்களால் பள்ளிப்பார்வையின்போதும் பயிற்சிகளின்போதும் மாணவர்களுக்குத் தமிழ்ப் பாடத்தில் அடிப்படைத் திறன்களில் இடர்பாடுகள் இருப்பது கண்டறியப்பட்டது. படித்துப் புரிந்துகொள்ளும் திறன் அடைவை மேம்படுத்த ஆய்வாளரால் ஒருங்கிணைந்த அணுகுமுறை மூலம் கற்றல் கற்பித்தலை மேம்படுத்துவதற்காக இந்த ஆய்வானது மேற்கொள்ளப்பட்டது.

## 3. Objectives (நோக்கங்கள்)

- தமிழ்மொழியில் படித்துப் பொருளறியும் திறன் அடைவைப் பெறுவதில் உயர்தொடக்கநிலை மாணவர்களுக்கு ஏற்படும் இடர்பாடுகளைக் கண்டறிதல்.
- படித்துப் பொருளறியும் திறன் அடைவைப் பெறுவதற்கான செயல்பாடுகளை வடிவமைப்பதில் ஆசிரியர்களின் தேவைகளை அறிந்து பயிற்சிப்புத்தகத்தை வடிவமைத்தல் .
- மாணவர்களின் பின்னணி வேறுபாடுகளின் அடிப்படையில் தமிழ்மொழியில் படித்துப் பொருளறியும் திறன் அடைவைப் பகுத்தாய்தல்

## 4. Hypothesis (கருதுகோள்கள்)

- படித்துப் புரிந்து கொள்ளும் திறன் அடைவைப்பெற பயிற்சிப் புத்தகத்தினைப் பயன்படுத்துவதில் முன்னறிச் சோதனை மற்றும் பின்னறிச் சோதனை சராசரி புள்ளிகளிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடு ஏதுமில்லை.
- மாணாக்கரின் பாலினம், பள்ளி அமைவிடம், பள்ளியின் வகையைப் பொருத்து படித்துப் புரிந்து கொள்ளும் திறன் அடைவைப்பெற பயிற்சிப் புத்தகத்தினைப் பயன்படுத்துவதில் குறிப்பிடத்தக்க வேறுபாடு ஏதுமில்லை.

- படித்துப் புரிந்து கொள்ளும் திறன் அடைவைப்பெற பயிற்சிப் புத்தகத்தினைப் பயன்படுத்துவதில் உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம் மற்றும் குடிமங்கலம் ஒன்றியங்களைச் சார்ந்த மாணவர்களின் முன்னறிச் சோதனை மற்றும் பின்னறிச் சோதனை சராசரி புள்ளிகளிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடு ஏதுமில்லை.

5. **Methodology (ஆய்வுச் செய்முறை)**
   - **a) Method (ஆய்வு முறை) :** ஒரு குழு பரிசோதனை முறை
   - **b) Sample (ஆய்வின் மாதிரி) :** ஏழாம் வகுப்பு மாணவர்கள் 150 பேர்
   - **c) Intervention (இடையீட்டுச் செயல்பாடு):** முன்தேர்வு–செயல்பாடுகள்–பின்தேர்வு
   - **d) Tool (ஆய்வுக் கருவி) :**

     முன்தேர்வு மற்றும் பின்தேர்வு வினாத்தாள், மாணவர் விவரக் குறிப்பு
   - **e) Data analysis(புள்ளியியல் பகுப்பாய்வு)** : சராசரி, திட்டவிலக்கம், t – சோதனை

6. **Major findings (ஆய்வின் முடிவுகள்)**
   1. படித்துப் புரிந்து கொள்ளும் திறன் அடைவைப்பெற பயிற்சிப் புத்தகத்தினைப் பயன்படுத்துதலில் உயர்தொடக்கநிலை மாணவர்களின் முன்தேர்வு மற்றும் பின்தேர்வு மதிப்பெண்களில் குறிப்பிடத்தக்க வேறுபாடு காணப்படுகிறது. முன்தேர்வில் 45.06 ஆக இருந்த சராசரி இடையீட்டுச் செயல்பாடுகளுக்குப் பிறகு பின்தேர்வில் 81 ஆக அதிகரித்துள்ளது.
   2. பாலின அடிப்படையில் முன்தேர்வு மற்றும் பின்தேர்வு மதிப்பெண்களில் குறிப்பிடத்தக்க வேறுபாடில்லை. மாணவர்களின் சராசரி 79.42 ஆகவும் மாணவிகளின் சராசரி 80.54 ஆகவும் காணப்பட்டது.
   3. பள்ளியின் அமைவிட அடிப்படையில் முன்தேர்வு மற்றும் பின்தேர்வு மதிப்பெண்களில் குறிப்பிடத்தக்க வேறுபாடில்லை. பின்தேர்வில் கிராமப்புற மாணவர்களின் சராசரி 80.56 ஆகவும் நகர்ப்புற மாணவர்களின் சராசரி 78.56 ஆகவும் காணப்பட்டது.
   4. பள்ளியின் வகை அடிப்படையில் முன்தேர்வு மற்றும் பின்தேர்வு மதிப்பெண்களில் குறிப்பிடத்தக்க வேறுபாடில்லை.

7. **Conclusion (முடிவு)**

இந்த ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் மொழி கற்பித்தலில் பல மாற்றங்களைச் செய்யும்போது மாணவர்களின் மொழித் திறன் வளர்ச்சி பெறும். அடிப்படைத் திறன்களில் நல்ல முன்னேற்றம் ஏற்படும் என்பது திண்ணம்.

8. **Educational Implications (கல்வியில் ஆய்வின் தாக்கம்)**

- படித்துப் புரிந்து கொள்ளும் திறன் அடைவைப்பெற கற்றல் விளைவுகள் அடிப்படையில் தேசிய மற்றும் மாநில அடைவு ஆய்வு வினாக்களை அணுகும் திறன்களை வளர்க்கப் பள்ளி அளவில் அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.
- படித்துப் புரிந்து கொள்ளும் திறன் அடைவைப்பெற கற்றல் விளைவுகளில் திறன் அடைவைப்பெற பயிற்சிப்புத்தகத்தினைப் பயன்படுத்துவதன் மூலம் மாணவர்களின் தமிழ் அடிப்படைத் திறன் அடைவில் அதிகத் தாக்கங்களை ஏற்படுத்த முடியும்.